தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-3 | தி.பி. 2016 | கும்பம் 27 (10-3-85) | 65 காசுகள் | இதழ் எண்: 53 | பகுதி 6-7

ஈழத் தமிழர்களின் ஈகக் குருதியிலே குளித்து முழுகுகிறார் தொண்டைமான்!

கற்பிழந்த தமிழ்ப் பெண்களின் கண்ணீரில் மஞ்சள் பூசுகிறார் தொண்டைமான்!

தமிழினத்தின் இறுதி வீடணன் தொண்டைமான்!

தமிழினத்தின் கொடும் பகைவன் செயவர்த்தனாவின் அரசியல் அடிவருடி தொண்டைமான்!

நூற்றுக்கணக்கான மலைத்தோட்டக் காணிகளுக்கு முதலாளி அவர்!

செயவர்த்தனா ஏறும் படைக்குதிரை தொண்டைமான்!

தொண்டைமானுக்குப் பாவலரேறுவின் சாட்டையடிகள்!

நுறுங்குபெய் தாக்கிய
கூழ்ஆர வுண்டு,
பிறங்குஇருங் கோட்டோடு
பன்றியும் வாழும்!
—அறநெறிச்சாரம்.

கல்லாது நீண்ட
ஒருவன் உலகத்து
நல்லறி வாளர்
இடைப்புக்கு மெல்ல
இருப்பினும் நாய்இருந்
தற்றே, இராஅ து)
இருப்பினும் நாய்குரைத் தற்று!
—நாலடியார்.

மானமும் நாணும்
அறியார், மதிமயங்கி
ஞானம் அறிவார்
இடைப்புக்குத் தாமிருந்து
ஞானம் வினாஅய்
உரைத்தல் நகையாகும்!
—பழமொழி.

வற்றிய குளத்தில் வயிறு நிரப்பும் கொக்குகள் போல, சிலர், தமிழினத்திற்கு வந்துற்ற கேடுகளுக்கிடையில் வயிறு நிரப்புவதற்காகவே, அவ்வப்பொழுது தமிழர் தலைவர்கள் என்று தங்களைப் பலவாறும் விளம்பரப் படுத்திக்கொள்வது, அக் கேடுகளில் ஒன்றாகவே கருதப்படவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட தமிழீழத் தலைவர்களில் ஒருவரே தமிழீழத்தில், இந்தியத் தமிழர்களாகக் கணக்கிடப்பெறும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தலைவராக இருந்து கொண்டு, அவர்களால் தம்மை நூற்றுக்கணக்கான குறுக்கங்கள் உள்ள மலைத் தோட்டங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்ட திரு. எசு. தொண்டைமான் என்பவர்.

இவர் இலங்கைத் தொழிலாளர் பேராயம் (காங்கிரசு) என்னும் தோட்டத் தொழிலாளர் கழகத்துக்குத் தலைவர். இவர் தலைமையில் ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் தொழிலாளர்கள் இயங்குகிறார்கள். அனைவரும் இந்தியத் தமிழர். கண்டி, நுவரலியாப் பகுதிகளில் இவர்கள் குடியிருக்கிறார்கள் இவர்களைக் காட்டிக் காட்டிச் சிங்கள அரசிடம், நல்ல பிள்ளையாக நடந்துகொண்டு, தம் சாய்காலையும், பதவியையும், பணத்தையும் ஒருங்கே வலுப்படுத்திக்கொள்வதே தொண்டைமானின் தொண்டு.

1961 இல் இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் அறப் போராட்டம் நடத்திய பொழுது அப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தால், இவருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படும் என்று அப்பொழுதைய சிறிமாவோ பண்டார நாயகா அரசு மிரட்டியதிலிருந்து, தமிழர்களுக்கு எதிராகவே குரல் கொடுத்து வருபவர் திரு. தொண்டைமான். இப்படி எதிர்க்குரல் கொடுப்பதாலேயே அவர் ஒவ்வொரு சிங்கள அரசவையிலும் அமைச்சராக இருக்கமுடிகிறது. இப்பொழுதும் அவர் சிற்றூர்களின் தொழிலமைச்சராக இருக்கிறார். இவர் தமிழ்நாட்டிலிருந்து அங்குச் சென்ற இந்தியத்தமிழ்க்குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இவர் பதவி நலங்கருதிப் பல வேளைகளில் அமைதியாக இருந்து, தம்முடைய குடும்பம் வாழ்க்கை என்று மட்டும் இன்பங்கண்டு வருபவர். ஆனால், சில வேளைகளில் சிங்கள அரசுக்கும், தம்மை குதிரை யோட்டும் கொடியவர் செயவர்த்தனாவிற்கும், எச்சில் சோற்றுக் கடனாக, நாய்க்குள்ள நன்றியுணர்வுடன், சிலசில கருத்துகளை கக்குவார். அவற்றில் தமிழர்களுக்கு மாறான எதிரான நச்சுத்தன்மைகளே நிறைந்திருக்கும் தமிழினத்தின் இறுதி வீடணன் இவராகத்தான் இருக்கமுடியும்.

இவர் அண்மையில், தமிழீழத்தைப் பற்றித் திருவாய்(!) மலர்ந்துள்ள கருத்துகள் கொடிய நச்சுத்தன்மை வாய்ந்தவை. அவை, “இலங்கையைத் துண்டு போட அனுமதிக்க முடியாது. இலங்கை ஒரே நாடு என்னும் அடிப்படையில்தான் தமிழர் சிக்கலுக்குத் தீர்வுகாண வேண்டும். தமிழீழம் பிரிவதை அன்றைய இந்திரா காந்தியும் விரும்பவில்லை; இன்றைய இராசீவ் காந்தியும் விரும்பவில்லை. இலங்கை அரசு இலங்கை வாழ் தமிழர்களோடு இணக்கமான உறவு கொள்வதையே விரும்புகிறது. ஆனால் இனக் கலவரத்துக்கு முகாமையான காரணம் விடுதலைப் புலிகளும் வேறு சிலருந்தாம்! இலங்கை ஒரு நாடாக இருக்கவேண்டும் என்ற கொள்கைக்கு மாறுபாடான எந்த முடிவையும் இலங்கை அரசு ஏற்காது. விடுதலைப்புலிகள் கருவிகள் ஏந்தி நடத்தும் போராட்டத்தைக் கைவிடும் வரை, இலங்கையின் படைத்துறை நடவடிக்கைகளை நிறுத்தமுடியாது” என்பன ஆகும். இவை செயவர்த்தனா கூறியவையா? தொண்டைமான் கூறியவையா? இவை செயவர்த்தனாவின் கொடிய மனத்தினின்று புறப்பட்டவை. தொண்டைமானின் தொண்டையிலிருந்து வெளியேறியவை என்பதில் ஐயமில்லை. ஈழத் தமிழர்களின் ஈகக் குருதியிலே குளித்து முழுகுகிறார் தொண்டைமான்! அங்குக் கற்பிழந்த தமிழ்ப் பெண்களின் கண்ணீரில் மஞ்சள் பூசுகிறார்! தமிழினத்தின் கொடும் பகைவன் செயவர்த்தனாவின் அரசியல் அடிவருடியே தொண்டைமான்என்பதைவெளிப்படுத்திவிட்டார். ஒருவேளை இவரை, இவர் தாய், சிங்களவனுக்குப் பெற்றெடுத்து விட்டாரோ? ஐயுறுகிறோம்!

—பெருஞ்சித்திரனார்.

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்
உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

பாவலரேறு அவர்களைக் கொல்லவந்த வழக்கறிஞர்கள் சிந்திக்க வேண்டும்!

— அதியமான், தாழையூத்து. —

இரு வழக்குரைஞர்கள் உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை 9-11-84 அன்று உயர்நெறி வழக்கு மன்ற வளாகத்திற்குள்ளேயே கொல்வதற்கு முயன்றிருக்கிறார்கள், இச்செய்தியைத் தமிழ் நிலம் கிழமை இதழ் பகுதி 45-48-இல் படித்துப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். இம்மடலை அவ்வழக்குரைஞர்களுக்கே அனுப்பவேண்டும். அவர்கள் முகவரி தெரியாத நிலையில் தமிழ் நிலம் இதழுக்கு அனுப்பப்படுகிறது.

காலஞ்சென்ற இந்திய நாட்டின் தலைமை அமைச்சர் திருவாட்டி இந்திரா காந்தியின் எலும்புச் சாம்பலை அரசுச் செலவில் ஊர் ஊராக எடுத்துச் சென்று, வழிபாட்டுக்கு வைப்பது ஒரு மூடப்பழக்கம் மட்டுமன்று ஒரு தனிப்பட்ட மதத்தை வளர்ப்பதற்காக அரசு எடுத்துக் கொண்ட முயற்சியேயாகும்; என்றொரு முறை வழக்கை (ரிட்) நடுவர் மாண்புமிகு நடராசன் அவர்களின் முன்னிலைக்குத் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். வழக்கின் விளக்கங்களை அருமையான தூய தமிழில் அவ்விரு வழக்குரைஞர்கள் உள்பட யாவரும் அறிந்து ஆய்ந்து பார்க்க எடுத்துரைத்திருக்கிறார்கள். வழக்குரைஞர்களுக்கு ஒருவேளை தமிழ் தெரியாதோ? அல்லது அவர்களுடைய தாய், தமிழ்த்தாயோ அன்றி வேறோ? தெரியவில்லை. ஒருவேளை அவ்விரு வழக்குரைஞர்களும் தமிழ் தம் தாய்மொழிதான் என ஏற்றுக்கொள்ளாத அவரின் கண்கள் இரண்டும் புண்ணுடையனவாய் இருக்கலாம். எனவேதான் வழக்கின் சாரங்களைப் புரியத் தெரியாமல் தவறாக நடந்திருக்கிறார்கள்.

பாவலரேறு அவர்களைத் தாக்க முயன்றபோது அக் கொலைஞர்கள், நாங்கள் கருப்புக் குப்பாயம் அணியாதிருந்திருந்தால் கொலை செய்திருப்போம் எனக் கூறி இருக்கிறார்கள். மேலும் நாட்டு மக்கள் எல்லாரும் அதைப்பற்றி ஒன்றுமே கூறாதிருக்கையில் உங்களுக்கு மட்டும் என்ன வந்துவிட்டது எனக் கத்தியிருக்கிறார்கள்.

இந்திய நாட்டின் மக்கள் அடிமை வாழ்வை உணராமல் இருக்க, காந்தியடிகளுக்கு மட்டுந்தான் என்ன வந்தது? பேசாதிருப்பதை விட்டுவிட்டு உரிமை வேண்டுமென்றார்! நாட்டில் உள்ளவன் எவனும் வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் ஓட்ட எண்ணுது தொடை நடுங்கி இருந்தபோது, வ. உ. சிதம்பரனார் மட்டும் ஏன் கப்பல் ஓட்டத்துணிந்தார்? வகுப்பு வாரித் திட்டத்தைப் பற்றிக் கவலைபடாது அரசே இருந்தபோது, ஈ. வே. இரா. பெரியாருக்கு மட்டும் என்ன வந்தது? வகுப்புவாரித் திட்டங்கேட்டார். இராசகோபாலாச்சாரியார் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து நடைமுறைப் படுத்தும்போது மாண்புமிகு காமராசு அவர்களுக்கு மட்டும் என்ன வந்தது, அதை எதிர்த்து ஒழித்தார். யாவருமே கேட்கவில்லை என்று காமராசும் இருந்திருந்தால், அவ்விரு வழக்கறிஞர்களும் காடுகளில் சென்று இன்று ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருப்பார்கள். கருப்புக் குப்பாயம் அணிந்துகொண்டு தமிழறிஞர் ஒருவரைக் கொல்லப் போயிருக்கமாட்டார்கள். வழக்குரைஞர்களின் அறிவுப்படி காமராசர் அவர்கள் அதைச் செய்திருக்கக்கூடாது

எனவே இமயமுதல் குமரிவரை இருக்கும் மக்கள் யாவருக்குமே கேட்கத்தெரியாத, அல்லது கேட்டால் என்ன ஆகுமோ என்ற அச்சத்தால் குடல் நடுங்கிகளாக இருக்கும்போது, பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்துகொண்டு நெறி விலகிச்செல்லும் அரசுக்கு அறிவுரை புகட்ட இவ்வழக்கைத் தொடுத்திருக்கிறார்கள். நூற்றுக்கு அறுபத்து இரண்டு பேர் கல்லாதார் வாழும் இந்நாட்டில், கற்றவர்களிலும் அறிவில்லாதவர்களாக வாழும் அவ்விரு வழக்குரைஞர்கள் போலப் பலர் இருப்பதாலும், அறத்தைக் கேட்க அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தின் அறிவியல் வளர்ச்சிக்காகத் துணிச்சலாகப் பாவலரேறு அவர்கள் அறமன்றஞ் சென்றிருக்கிறார்கள். இதனைப் புரிந்து கொள்ளத் தெரியாத வழக்குரைஞர்களே! பாவலரேறு பெருஞ்சித்திரனார் தொடுத்த வழக்கைப்பற்றி ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று இந்நாட்டு மக்கள் யாவரும் கேளாதபோது ஏ, அடிமைகளான நீங்கள் மட்டும் பாவலரேறு அவர்களைக் கொலை செய்யத் துணிந்திருக்கிறீர்கள்!! இதிலிருந்து என்ன தெரிகிறது. மக்களுக்கு அறிவு இருக்கிறது, அவ்விருவருக்கும் அறிவு அறைபோயிருக்கிறது; எனவே வன்செயலில் இறங்கி இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களை நாள்தவறாமல் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் செயவர்த்தனாவை ஏன் இப்படிச் செய்கிறாய் - என்று கேட்கத் துணிவற்ற மெய்நடுக்கக்கூட்டமே நீ தமிழறிஞர் ஒருவரைக் கொல்லத்துணிந்திருக்கிறாய் பின் உன் நிலை என்ன ஆகும்? என்பதைச் சிந்தித்துப்பார். இந் நாட்டைக் காக்க உன்னால் ஆகாது; பாவலரேறு அவர்களால் முடியும்.

பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்மொழிக்காக, தமிழினத்திற்காகத் தம் இன்ப நுகர்வை மட்டுமன்று, உயிரையே கொடுக்க அணியம். உயிர் போனாலும் போகட்டும், தமிழினம் வாழவேண்டும் எனப் பொதுப்பணி செய்கிறார்கள். பெருஞ்சித்திரனாரைக் கொன்றுவிடலாம்; அவர்கள் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளில் விதைத்த விதைகள் நாட்டில் முளைத்துப் பயிராகிப் பயன் தந்துள்ளன. அவற்றை உண்டதால், அரத்தத்தோடு கலந்து ஓடிக்கொண்டிருக்கும் உணர்ச்சிகளை நீங்கள் யாருக்கு அடிமைகளாக இருக்கிறீர்களோ அவர்கள் வந்தாலும் அவ்வுணர்வை நீக்கமுடியாது.

இத்துடன் இன்னொன்றையும் எழுதியாக வேண்டும். தமிழர்கள் மிக அன்புடையவர்கள். ஆனால் அவ்வன்பு தன்னை அழித்துக்கொள்ளும் செயலாக இயங்கி வருகிறது. அது மிக வருந்தத்தக்கது. தலைமையமைச்சர் இறந்ததும், சிலர் தம்உடல்களில் மண்ணெய் கன்னெய் போன்றவற்றை ஊற்றித் தீ மூட்டிக்கொண்டு, தற்கொலை செய்துகொண்டதாய்ச் செய்திகள் வந்தன. இதுபோன்றே தமிழ்நாடு முதலமைச்சர் நோய்வாய்ப்பட்டபோதும் பலர் இச்செயலைச் செய்தனர். இக்காலம் உடன்கட்டை ஏறும் காலம் அன்று மேலும் நான் குறிப்பிட்டுள்ள தலைவர்களின் நிலைக்காக உருகி அவரவர்களுடைய மக்களோ, உறவினர்களோ தற்கொலை செய்து கொள்ளவில்லை எனவே மற்றவர்கள் இவ்வகை செய்வது அன்பின் பெருக்கத்தைக் காட்டாது; மூடப் பழக்கங்களையே இச் செயல்கள் வளர்ப்பன.

தற்கொலை செய்துகொள்ள முயலுவோர் மீது அரசு எடுக்கும் சட்ட நடவடிக்கைகளை எடுத்து இப்பழக்கத்தை நாட்டை விட்டே ஓட்டவேண்டும். உடன்கட்டை ஏறுதல் எவ்வழிக் குற்றமோ, அது போன்றதே இப்படிப்பட்ட தற்கொலைக் குற்றங்களும். இவ்வகைத் தற்கொலைஞர்கள் குடும்பச் சுமையிலிருந்து விடுபட்டு விடுகிறார்கள். ஆயின் அவர்களை நம்பி இருக்கும் பெற்றோர், உடன்பிறப்புகள், மனைவி மக்கள் தெருவில் நிற்பர். இம் மூடப் பழக்கங்கள் ஒழியவே, பாவலரேறு அவர்கள் எடுத்த முயற்சி. மூடபழக்கங்களை அறமன்றம் தடுத்து நிறுத்த முடியாது. அதை வழக்காளர் போன்ற பொது நலம் நாடுபவர்கள்தாம் பொது மக்களிடம் சென்று அறிவுக்கருத்துகளைப் பரப்பவேண்டும் என்று கூறியிருக்கிறார் நடுவர். இதிலிருந்து என்ன தெரிகிறது? இப்படிப்பட்ட மூடப் பழக்கங்கள் நாட்டில் இருத்தல் கூடாதென்பதை அறமன்ற நடுவர் அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள் மக்களின் வாழ்விற்கு மூடப் பழக்கங்கள் கூடாவென்பது விளங்குகிறது.

அந்த கொலை வழக்குரைஞர்கள் இந்த வழக்கின் சாரங்களையெல்லாம் கேட்டுக்கொண்டுதானே இருந்திருப்பார்கள். அவர்களுக்கு அறிவு எங்கே போயிற்று? இவர்கள் என்ன நினைக்கிறார்கள், நாட்டில் மூடப் பழக்கவழக்கங்களைக் கையாளும் மூடர்கள் இருந்தால்தான் இவ்விரு கொலைஞர்களும் வளமாக வாழமுடியும். மக்கள் அறிவுடையவர்களாய் இருந்தால் இவ்விருவரும் மக்களை ஏமாற்றி வாழவழி கிடைக்காதே, எனவேதான் யாருக்கும் இல்லாத கவலை உங்களுக்கேன் என்று பாவலரேறு அவர்களைக் கேட்டிருக்கிறார்கள். பலகோடி மக்கள் வாழும் இந்நாட்டில் யாவருக்கும் இல்லாத கவலை பாவலரேறு அவர்களுக்கு ஏன் வந்தது தெரியுமா? மக்களுடைய நலன் தேடுவதற்கு இன்று தமிழகத்தில் இவர் ஒருவர்தான் இருக்கிறார்; எனவே கேட்டார். அதைப் புரிந்துகொள்ளாது தமிழ் அறிஞர் ஒருவரை கொல்லத் துணிந்திருக்கிறார்கள். இந்திராவின் கொலை தவறு என்ற உணர்வற்றவர்களே இன்னுமொரு கொலையைச் செய்யத் துணிந்துள்ளனர்.

மேலும் அக்கொலைஞர்கள் கேட்டு இருக்கிறார்கள், வழக்கறிஞர் திரு. பி. வி. பக்தவத்சலம் அவர்களைப் பார்த்து, நீங்கள் போய் இவருக்குத் துணை நிற்கிறீர்களே என்று. வழக்கறிஞர் பக்தவத்சலம் அவர்கள் பாவலரேறு அவர்களுடைய தன்னலத்திற்காகத் துணை நிற்கவில்லை; நாட்டு மக்களின் மூடப் பழக்கங்களை ஒழித்துக்கட்டவே துணை நிற்கிறார்கள். அக்கொலை வழக்குரைஞர்கள் போல மக்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டும், அவர்தம் வாழ்க்கை வளமானால் போதும் என்ற தன்னலம் நாடுபவர் அல்லர். வழக்கறிஞர்கள் திருவாளர் பக்தவத்சலம் அவர்களும், தென்னன் அவர்களும் நாட்டு மக்களின் மூடக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட மூடப் பழக்கங்களை நாட்டைவிட்டு அகற்றிடவேண்டும் என்ற உள்ள உணர்வினால் இணைந்திருக்கிறார்கள். எனவே, அக்கொலைஞர் இருவரும் சிந்தித்து ஆகவேண்டும். இன்னும் பாவலரேறு அவர்களைக் கொலை செய்யும் முயற்சிகள் போல நிகழ்ச்சிகள் நடப்பது என்பது தமிழகத்திற்கு நல்ல காலம் அன்று என்பதை இக் கொலைஞர்கள் உணர்வார்களாக.

உலகத் தமிழின முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு தற்போது பெரும் பொறுப்பு வந்துள்ளது. நாட்டில் எல்லாத்துறைகளிலும் சீர்கேடான நிலைகள் வளர்ந்து நாட்டைச் சீரழிக்கும் சூழல்கள் தென்படுகின்றன. யாருக்கும் இந்த அரசில் பாதுகாப்பில்லை. யாரும் எதையும் செய்யலாம் என்றாகிவிட்டது. எடுத்துக்காட்டு:

பாவலரேறு அவர்களைக் கொலைசெய்ய இரண்டு வழக்குரைஞர்கள் துணிந்திருக்கிறார்கள். நெறி காக்க வேண்டியவர்களே, நெறி தவறும் நிலையில் இருந்தால் நாட்டில் ஒழுக்கம் இல்லை என்றே ஆகிறது. விரைவில் இந்நாட்டு மக்களைக் காக்க வேண்டிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முயலவேண்டும்!

தென்மொழி இலக்கியக் கழகம்.

மூன்றுவது கூட்டம், கடையநல்லூர்.

தி. பி. 2016, சுறவம் 28 (10-2-1985) ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணியளவில் கடையநல்லூர் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தென்மொழி இலக்கியக் கழகத்தின் மூன்றுவது கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'ஈழத் தமிழர் நிலை' என்னும் தலைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நகரிலுள்ள பல்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டனர்.

புலவர் இரா. இளங்கண்ணன் அவர்கள் தலைமையேற்க, தமிழ் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது. பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தென்மொழி அன்பராக உள்ள திரு. இளவரசு (இராசக்குமார்) பாவடிவில் வரவேற்புவழங்கினார். தலைவர் தொடக்க வுரைக்குப் பின் திரு. இனநலவேந்தன் (உ.த.மு.க., நெல்லை (தெற்கு) மாட்டச் செயலர்), திரு. நடராசன், (இந்தியப் பொதுவுடைமைக் கட்சி கடையநல்லூர்). திரு. இளமுருகு, திரு. தமிழன்பன் (உ.த.மு.க. நெல்லை (வடக்கு- மாவட்டச் செயலர்) ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் திரு தென்னவன்கோ, தென்மொழி இலக்கியக் கழகத்தின் நோக்கத்தினை விளக்கிய பின்னர், 'ஈழத் தமிழர் நிலை' என்னும் தலைப்பில் ஏறத்தாழ 1-30 மணி நேரம் சிறப்புரை ஆற்றினர்.

கடையநல்லூர் உ.த.மு.க., திரு இரா, பாண்டியன் நன்றி நவில, இரவு 8-30 மணியளவில் கூட்டம் முடிவடைந்தது.

சிறப்புக்கூட்டம் முடிந்தவுடனே கடையநல்லூரிலிருந்து நாலு கல் தொலைவிலுள்ள கண்ணியாபுரம் (கம்மாப்பட்சேரி), வலசை ஆகிய ஊர்களுக்கும் செல்லத் தீர்மானித்து, திருவாளர்கள்: தமிழன்பன், இனநல்வேந்தன், இரா. பாண்டியன், இரா. இளங்கண்ணன், பழனி, தமிழ் மணி, தென்னவன்கோ ஆகியோர் சென்றனர். கண்மணியாபுரத்தில் அவ்வூர்ப் பொதுமக்கள் ஏற்பாடு செய்திருந்த பொங்கல் விழாக் கூட்டத்தில் திரு. தமிழன்பன், திரு. தென்னவன்கோ ஆகிய இருவரும் உ. த. மு. க.-வை அறிமுகம் செய்துவைத்து உரையாற்றினர். "தமிழ்நிலம்" இதழ்கள் கூட்டத்தில் இலவயமாக வழங்கப்பெற்ற பின்னர் கடையநல்லூர் திரும்பினர். அன்று இரவு ஒரு மணி வரை திரு இரா. பாண்டியன் இல்லத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

வாங்கி விட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள் விற்பனைக்கு அணியமாகவுள்ளன.

1.	பாவேந்தர் பாரதிதாசன்	14—00
2.	இனம் ஒன்று படவேண்டும் என்பது எதற்கு?	1—00
3.	வாழ்வியல் முப்பது (மறு பதிப்பு)	1—50
4.	சாதித் தீமைகளும், அதை ஒழிக்கும் திட்டமும்	0—50
5.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	2—25
6.	இலக்கியத் துறையில், தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்	1—5)

தொடர்பு கொள்ள:

மே/பா, தென்மொழி, சென்னை-5.

அறியாமை அடிமைத்தனத்தின் அடிப்படை!

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண் : 53 (10-3-85) பகுதி 7-8

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-2.

- கழக முதல்வர் -

25-4: இனி, தென்மொழி தொடங்கிய பின்னர் அவ்வப்பொழுது, பலவகையிலும் பணத் தட்டுப்பாடுகள் வந்து கொண்டிருக்கும். கையிலிருந்த பணத்தை யெல்லாம் அதிலேயே ஈடுபடுத்தினேம். நெருங்கியிருந்த அன்பர்கள் அவ்வப்பொழுது, சிறு சிறு அன்பளிப்புகளைச் செய்துவந்தனர். ஒருமுறை அச்சகப் பட்டியல் கொடுக்க வியலாமல் இடர்ப்படுகையில் எம் துணைவியாரின் ஆறு பவுன் கழுத்துத் தொடரியைக் கொஞ்சமும் மனம் கசியாமல் விற்று முதலீடு செய்யவேண்டி வந்தது. அதன்பின் ஒருமுறை அச்சகப் பட்டியல் தொகைக்காக அச்சகத்தார் மிகச் சினந்துகொண்ட பொழுது, வீட்டு வாயிலின்முன் நிறுத்தியிருந்த எம் புதிய மிதி வண்டியை, அதற்கீடாக எடுத்துக்கொண்டு போகச் செய்தோம். பணநசை எம்மிடம் கொஞ்சமேனும் இருந்திருப்பின், இவ்வாறு செய்வதற்கு எவ்வாறுனும் மனம் துணிந்திருக்க மாட்டோம்.

25-5: மறைந்த தொழில் மேதையும், அறிவியல் அறிஞருமான, கோவை, கோ. துரைசாமி (G. D. Naidu) அவர்கள் நம் பால் மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டவர். நாம் அவர் பால் கொண்டிருந்த நட்புக்கு ஈடு இணையே இல்லை, நாம் கோவை சென்றால் அவர் வீட்டில் ஒரு வேளையாவது விருந்துண்ணாமல் நம்மை விடுத்த தில்லை. அவ்வாறுன ஒவ்வொரு முறையும், 200, 300 என்று வழிச் செலவுக்குக் கொடுப்பார். அத்தொகையைப் பெற ஒவ்வொரு முறையும் நாம் மனங்கூசித் தயங்கி நின்றபொழுதெல்லாம், அப் பெருந்தகை அத்தொகையை எம் கைகளில் வலிந்து திணித்ததை இன்றும் விழிகளில் கண்ணீர் மல்க நன்றியுடன் நினைவுகூர்கிறேம். அவ்வன்புத் தொல்லையைப் பெற்றுக்கொள்ளும் இடர்ப்பாட்டிற்கு அஞ்சியே சிலமுறை நாம் கோவை சென்றும் அவரைப் பாராது திரும்பியிருக்கின்றோம். அப்பொழுது தென்மொழி கடலூரில் இருந்தது, ஒருமுறை கோ. து. அவர்கள் எம்மைத் தனிமையில் வந்து பார்க்கும்படி கூறியிருந்தார். சென்றிருந்தோம். சிறிதுநேரம் பேசியிருந்து விட்டு திரு. கோ. து. அவர்கள் தம் துணைவியாரை அழைத்து ஏதோ சொல்லியனுப்பினர். அவ்அம்மையார் அறைக்கு உள்ளே சென்று, ஒரு கை நிறைய ஒரு கட்டு உருபாத் தாள்களைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார்கள். திரு. கோ. து. அவர்கள் இரு கைகளாலும் அவற்றை வாங்கி என் கைகளைப் பிடித்துக் கொடுத்து "இதை எடுத்துக்கொண்டு போங்கள்" என்று அன்புடன் வந்து வழியனுப்பினர். அதில் 5,000 உருபா இருந்தது. அவர் நம்மேல் வைத்திருந்த அன்புக்கும் மதிப்புக்கும் நம்பிக் கைக்கும் இன்னும் இரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடவேண்டும்.

25-6: ஒருமுறை நாம் கோவை சென்றிருந்தோம். எம்முடன் திருக்குறள் பெருமாளையும் அழைத்துச் சென்றிருந்தோம். அக்கால் குடியரசுத் தலைவர் திரு. கிரி அவர்கள் கோவைக்கு வந்திருந்தார். அவருடன் அமைச்சர்கள் சிலரும், அதிகாரிகள் பலரும், கோவை, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் என்ற வகையில் ஒருபடையே வந்திருந்தது. திரு. கிரி அவர்களுக்கு நம் கோ. து. அவர்கள் பகல் விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த விருந்தில் கிரி அவர்களுடன் மூவரே சாப்பிடும் வகையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. அம்மூவர் திரு. கோ. து. அவர்களும் நாமும், நம் நண்பர் திருக்குறள் பெருமாளுமே ஆகும். அன்று திரு. கிரி அவர்களுடன் நேருக்கு நேராக அமர்ந்து விருந்துண்டோம். திரு. கோ. து. அவர்களின் 'கோபால் பாக்' வீட்டுக்கு முன்னர் ஏராளமான அதிகாரிகளும், காவலர்களும் நிறைந்திருந்தனர். நாங்கள் உணவுண்ணும் அறைக்கு வெளியில் உள்ள முன்றிலில், அமைச்சர்களும், ஆட்சித் தலைவர்களும், பெரிய காவல் துறை அதிகாரிகளும் வெறுமனே அமர்ந்திருந்தனர், எண்ணிப்பாருங்கள். இந்நிலை யாருக்கு வாய்க்கும்?

இனி விருந்து முடிந்ததும், நாமும், பெருமாளும் ஒரு மெத்திருக்கையிலும், திரு. கிரி அவர்கள் எங்களுக்கு முன் உள்ள மெத்திருக்கையிலும், திரு. கோ. து. அவர்கள் எங்கள் இரண்டு இருக்கைகளுக்கும் நடுவாக ஓர் உயர்ந்த நாற்காலியிலும் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது குடியரசுத் தலைவர் கிரி அவர்களைப் பார்த்து, திரு. கோ. து. அவர்கள் கூறுகிறார்கள்; (அவருடைய சொற்களாலேயே கூறுகிறோம். "இவர் (எம்மைக்காட்டி) சாதாரண மனுஷர் அல்லர். பெரிய பேரறிஞர்; இவர் ஒருவரைத்தாம் நான் உண்மையான தமிழர் என்று கருதியிருக்கின்றேன். இவரைத்தவிர வேறெவரையும் உண்மையான தமிழராக நான் மதிப்பதில்லை. மேலும், இவர் ஒருவர் எழுதுவதைத்தான் நான் ஓர் எழுத்துவிடாமல் படிக்கின்றேன். அவ்வளவு சுவையாகவும், அறிவாகவும் இருக்கும் அவர் எழுத்து. ஆனால் மிகவும் பிடிவாதக்காரர். கொள்கையை ஓர் இம்மியும் விட்டுக்கொடுக்க மாட்டார். நானும் எவ்வளவோ கூறிப்பார்த்து விட்டேன். தனித்தமிழ்-தனித்தமிழ் என்று நமக்கெல்லாம் புரியாத(!) தமிழில் எழுதுகிறார். மிகவும் நேர்மையாளர்; உண்மையானவர்; பண்புள்ளவர்' என்று ஆர்வத்தோடும், பெருமிதத்தோடும் அவர்கள் கூறியதை மிகவும் அடக்கத்துடன் இன்றும் நினைவு கூர்கிறோம்.

25 7: அத்தகைய பெரும் பேரறிஞர் ஒருவரின் முழுத் தூய அன்பைப் பெற்றிருந்தும் அவரை நம் தமிழ்நாட்டு விடுதலைக்காக உதவவேண்டும் என்று கேட்டு வந்திருந்தேனே யொழிய, நம் தென்மொழிக் கென்று ஒரு காசைத்தானும் ஒரு முறைகூடக் கேட்டதில்லை. அவராகவே கொடுத்த அன்பளிப்புகளைத் தவிர நாமாக அவரிடமிருந்து எதையுமே கேட்டதில்லை.

25-8: ஒருமுறை நாமும் எம் துணைவியும் அவரின் அறிவியல் கண்காட்சித் திறப்பு விழா அன்பழைப்பை ஏற்றுக் கோவை சென்றிருந்தோம். அத்தனை ஆரவாரத்திலும் எங்களை மிக்க அன்புடன் அப்பெருந்தகை வரவேற்று, அனைத்தையும் சுற்றிக் காட்டினார். அக்கால் காட்சியகமும், அலுவலகமும், பணியகமும் முடிந்திருந்த பின் மாலை நேரம். அவர் வீட்டுக்கு அருகே கட்டியிருந்த 'அழிப்புக்குக் கட்டிய கட்டடம்' (Construction for destruction) என்னும் கட்டடப் பகுதிக்குள் திரு. கோ. து. அவர்களுடன் நாங்கள் இருவரும் நுழைந்தோம். அப்பொழுது, எம் துணைவியாரைப் பார்த்து, அந்த மேதை, "பாருங்கம்மா, இவர் தென்மொழி, தென்மொழி என்று அதிலேயே செத்துக் கொண்டிருக்கிறார். நான் இவரை இங்கேயே (கோவைக்கே) வந்துவிடச் சொல்கிறேன். நான் இவருக்கு, இங்கு வந்துவிட்டால், மிகவும் துணையாக இருக்கமுடியும். இங்கு இவருக்கு ஒரு பெரிய வீடும், பெரிய ஓர் அச்சகமும் தருகிறேன் என்று சொல்கிறேன். இவர் வரமாட்டேன் என்கிறார்" என்று கூறிக்கொண்டே அவர் தரவிருந்த அச்சகப் பகுதியை எங்களுக்குச் சுட்டிக்காட்டினார். நாம் அப்பொழுது அவரிடம் சொன்னேம்: "ஆமாம் நீங்கள் என் கொள்கைக்கு வரமாட்டேன் என்று சொல்லி விட்டீர்கள். தமிழ்நாட்டு விடுதலைதான் என் முழுக் கொள்கை, குறிக்கோள் எல்லாம். நீங்கள் அதற்குத் துணையாயிருந்தால் போதும்; எனக்குத் துணையாக இருக்கவேண்டும் என்று விரும்பவில்லை. நீங்கள் இப்பொழுது "சனசங்க"த்தை ஆதரிக்கின்றீர்கள். பிறகு வேறு கட்சியை ஆதரிப்பீர்கள். உங்களுக்கு அரசியலில் நிலையான ஒரு கொள்கை இல்லை. நடுவண் அரசை எதிர்ப்பதே உங்கள் கொள்கையாக இருக்கிறது. அந்தக் கொள்கைக்காக நீங்கள் எந்தக் கட்சியுடனும் சேர்வீர்கள் - சேரத் தயங்கமாட்டீர்கள். அப்பொழுதெல்லாம், நான் நீங்கள் கொடுத்த வீட்டில் குடியிருந்துக் கொண்டும் நீங்கள் கொடுத்த அச்சகத்தை வைத்துத் தென்மொழியை வெளியிட்டும் கொண்டிருந்தால், நான் உங்களை அரசியல் முறையில் ஆதரிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பீர்கள். நான் அவ்வாறு உங்களை ஆதரிக்கா விட்டால், நீங்கள் உடனே இவ்விடத்தை விட்டுப் போய்விடுங்கள் என்று சொன்னாலும் சொல்வீர்கள். நான் அப்பொழுது என்ன செய்வேன்? எங்கே போவேன்? அந்த நிலை எனக்கு வரக்கூடாதன்றோ? அப்படிப்பட்ட நிலை என் நெடிய கொள்கைக்குத் தடையாகவன்றோ அமைந்து விடும். அதனால்தான் நான் கோவைக்கு - உங்கள் இருப்பிடத்திற்கு வர மறுக்கிறேன். நீங்கள் எனக்கு வீடும், அச்சகமும் கொடுக்க விரும்பினால், அவற்றை நானிருக்கும் இடத்திலேயே அமைத்துக்கொடுங்கள். இல்லையெனில் அவற்றுக்காக என் கொள்கைப் பாதையில் தடைகளை ஏற்படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை. மற்றபடி உங்கள் தூய்மையான அன்பையும் ஆதரவையும் என்றுமே நான் மதிக்கிறேன்; பாராட்டுகிறேன்; போற்றுகிறேன், அதில் என்றுமே நான் மாறுபட மாட்டேன்'! என்று மிகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் அவரிடம் கூறினேம்.

திரு. கோ. து. அவர்கள் நம்மேல் வைத்த பேரன்பையும், அளவற்ற மதிப்பையும், நேரில் கண்டு வியந்த அன்பர்கள் காலஞ்சென்ற பெருமகர்கள், 'மூலிகை மணி' ஆசிரியர் கண்ணப்பர் அவர்களும், 'சிவாசி' இதழ் ஆசிரியர் பாவலர் திருலோக சீத்தாராம் அவர்களுமே!

25-9: இதுபோல் எம் வாழ்வில் பற்பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவற்றுள் தேவையான சிலவற்றையே இவ்விடத்தில், அதுவும் கூறவேண்டிய கட்டாயத் தேவையாலும், நம்மேல் பணத்தொடர்பாகக் கூறப்பெறும் பழிகளையும் இழிவுகளையும் புறங்காண வேண்டியிருப்பதாலும், நம் இயக்கத்தின் மூல முதல் அடிநிலைத் தொண்டனாகிய எம்மால், எம் இயக்கமும் அதன் வழிநடத்தும் பணிகளும் தொய்வுறக் கூடாது என்பதாலும், எவ்வகை உள்ளுணர்வின்றியும், அறிவுச் செருக்கின்றியும், செயல் பெருமிதமின்றியும், இவற்றை இங்கு வெளிப்படுத்துகிறோம். மற்றபடி, இந்நிகழ்ச்சிகளை அவ்வப்பொழுதோ, அல்லது வேறு எப்பொழுதோ கூட எழுதியோ, பொதுவிடங்களில் கூறியோ, நாம் பெருமிதப்பட்டுக் கொண்டதில்லை என்பதையும் மிகவும் அடக்கமான உள்ள உணர்வுடன் இயக்க அன்பர்களுக்குக் கூற விரும்பினேம். இவை கூறப்படுவதன் நோக்கமே, நாம் நம் இளம் அகவைப் பொழுதிலிருந்தே பணத்துக்கோ, பதவிக்கோ, பட்டத்துக்கோ, வாழ்வியல் ஆசை அங்காப்புகளுக்கோ, இம்மியளவானும், ஓர் எள்ளின் மூக்கத்துணையானும் விருப்பமோ வேட்கையோ கொண்டதில்லை என்பதும், அவற்றால் நாம் எம் அறிவானும் தமிழினத் தேவையானும் கண்டு கடைப்பிடித்து வரும் உயிர்க் கொள்கையைக் கை நெகிழ்த்ததில்லை என்பதுமே என்க.

25-10: ஒருமுறை (1957- 8 வாக்கில் நாம் இந்தி யெதிர்ப்பில் சிறை சென்று மீண்டு எம் அரசுப் பணியிழந்த காலத்தில்) தென்மொழிப் பணி, மிகுந்த பொருளியல் முட்டுப்பாட்டால் தொய்வடையும் நிலையிலிருந்தது. தென்மொழிக்காக நாம் அன்றுவரை எவரிடமும் போய் அன்பளிப்புக்காக நின்றதில்லை. தொடக்கத்தில் 1959 ஆம் ஆண்டளவில், அதுவும் எம்முடைய நெருங்கிய நண்பர்கள் ஒரு சிலர் தாங்கள் குறிப்பிட்ட ஒரு சிலரிடம் நன்கொடைப் பெற்றுத் தருவதாகக் கூறியதால், மிகு புகழ்பெற்றிருந்த திரைப்பட நடிக, நடிகையர் சிலரிடம் நன்கொடைக்காகப் போயிருக்கின்றோம். அக்கால் அவர்களும், நாங்கள் சென்றிருந்த காலம் ஆண்டிறுதிக் காலமாகையால், ஒரு மாதம் கழித்து ஆண்டுத் தொடக்கத்தில் வரக் கேட்டுக் கொண்டதுடன், தாங்கள் அன்பளிப்பாக அளிக்கவிருக்கும் தொகையுங் கூட தலைக்குப் பத்தாயிரம் என்ற கணக்கையும் கூறினர்; ஆனால், ஒருமுறை சென்று ஏதோ காரணத்தால் தள்ளிப் போட்ட அவ்வன்பளிப்பைப் பெற்றுக் கொள்ள விரும்பாமற் போனதால், பின்னர் அவர்களிடம் செல்லவே இல்லை. அந்நடிக நடிகையருள் நடிகர் திலகம் திரு. சிவாசி கணேசனும், ஒருவர், நாட்டியப் பேரொளி திருவாட்டி பத்மினியும் ஆவார்.)

25-11: எனவே, அக்கால கட்டத்தில் ஏற்பட்ட தொய்வை எப்படியேனும் சரிகட்டவேண்டி, அன்பர் சிலரிடம் கலந்து பேசி, ஓரிருவரிடம் மட்டும் நன்கொடை கேட்பது என்று முடிவுசெய்து, அவர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடம் சென்றோம். எம் அன்பர் ஒருவரையும் உடன் அழைத்துப் போயிருந்தோம்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர். தூய தமிழுக்கு நல்லாதரவு நல்குபவர். பாவாணரின் பணிக்கும் பல நிலைகளில் துணை நின்றவர். அவரிடம் உண்மையான தமிழ்ப்பற்று உள்ளதென்றும், உண்மையான தமிழ்த் தொண்டுக்குத் துணை நிற்பார் என்றும் மனமார நம்பினேம்! எனவே குன்றக்குடி மடத்திற்குச் சென்று, அவரைக்கண்டு, தென்மொழிக்கு வந்துள்ள பொருள் நிலை இடர்ப்பாட்டை விளக்கி, அவரிடம் உதவிக்கு வந்துள்ளதாய், ஒரு

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

குலப்பட்டங்களைக் குப்பையில் போடுங்கள்!

பெண் உரிமையும், குமுகாயப் புரட்சியும், பொதுவுடைமை விதைப்பும், தமிழின விடுதலையும்!

– பொதுத் தொண்டன் –

‘விடுதலை’ - என்பது கட்டுப்பாட்டிலிருந்து அல்லது கட்டுப்பாடுகளிலிருந்து மீண்டு தன்னிறைவு தரக்கூடிய வகையில், தன்னுரிமை கொள்ளும் ஒரு நிலை ஆகும்.

அது விளங்கப் பெறவேண்டுமானால் அதனின் முந்தைய வடிவங்களான அறிவை, உணர்வைக் கெடுத்து அறியாமைக்குப் படுத்தி அடக்குகின்ற முறை, பின் அவ்வடக்கு முறையை அறிந்துகொள்ளக்கூடாது என்கிற வகையில் அறிவை, உணர்வை மழுங்கடிக்கிற அடக்குமுறைகள் - போன்ற கட்டுப்பாடுகளை நாம் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும்.

அடிமைத் தனத்தின் ஆழம் விளங்கிக்கொள்ளப் பெறும் பொழுதுதான் உண்மை விடுதலையின் உயரம் தெரியும்.

அடிமைத் தனத்தை எளிதில் விளங்கிக்கொள்ள முடியாத வகையில் அடிமைப்படுத்தும் தன்மையையே நாம் பார்ப்பனீயத் தன்மை என்று கூறுகிறோம்.

எனவே பார்ப்பனியம் என்பது பார்ப்பனர்களின் அறிவு என்றோ, உணர்வு என்றோ, உள்ளம் என்றோ, தந்திரம் என்றோ மட்டும் பேசிக் கொண்டிருப்பது, நம்முடைய முழுமையான தெளிவின்மையையே காட்டும்.

மொழி நிலையில் உலக மொழிகளுக்கெல்லாம் மூல மொழியான, முதன்மை மொழியான தமிழ் மொழியிலிருந்து சொற்களையும் மூலங்களையும் பெற்றுத் தம் மொழிகளில் புழக்கப் படுத்துவதோடு, மூல மொழியான தமிழ் மொழியில் அச்சொற்கள் பயன்பட்டு வந்ததற்கான சான்றுகளையும் தம் மொழியான சமற்கிருதத்தில் பெயர்த்து எழுதிக்கொண்டு, மூலமான தமிழ்மொழி நூல்களை அழித்துவிட்டு-இக்கால் தம் மொழியே உலகின் முதன்மொழி என்று தவளைக் கத்தாய் கத்திக்கொண்டிருக்கும் ஆரியப் பார்ப்பனீயத்தின் இச் செயல்களையே நாம் மொழிவழியில் பார்ப்பனியத்தின் ஆளுமை (ஆதிக்கம்) என்று உணர வேண்டியவர்களாக உள்ளோம்.

இவ்வகையில் மொழி வழி மட்டும் அல்லாமல், இனத்தைச் சிதைத்துப் பண்பாட்டை நாகரிகத்தைச் சீரழித்து, நம் தமிழக்குலத்தின் அருமை பெருமைகளைத் தமதாக்கிக்கொண்டு, தம் நச்சுகளை ஊன்றி விதைத்துவிட்டு, ஓங்காரச்சிரிப்பை ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்கும் ஓநாய்களை அதன் நச்சு சான்ற உள்ளங்களை, உணர்வுகளை ஆழங் கண்டுகொள்வதே, நாம் நம் அடிமைத் தனத்தின் ஆழத்தின் பெரும் பகுதியைக் கண்ணுற்றதாகக் கொள்ளவேண்டும்.

இவ்வகையில் பார்ப்பனீயமானது நம் மினத்தவரிடையே வேறுபாடுகளை உண்டுபண்ணி, புதிய பார்ப்பனீய உணர்வு நிலையை இந்த ஏழைத்தமிழினின் உள்ளுணர்வுகளில் பாய்ச்சிப் பொருளியல், குமுகாய ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தி விட்டிருக்கிற இத் தாங்கொண்ணக் கொடுமையிலிருந்து விடிவை நோக்கிச் சிந்திப்பதே நம் கடமையாகும்.

இவ்வடிமைத் தனங்களைக் கண்ணுறுகிற கோணத்தில் ஒவ்வோர் இயக்கத்தினரும் மாறுபடுகிற வகையும், அம் மாறுபாடுகளுக்குக் காரணமாக அமைவதும், பார்ப்பனீயமாகவே அமைகிறது. தெளிவான முழுமையான பார்வை அனைவரிடத்திலும் இல்லாததே மாறுபாட்டுக்குக் காரணமெனில், அம் முழுமைப் பார்வை இல்லாமல் இருப்பதற்குக்-கோணம் மாற்றுவதற்குப் பார்ப்பனியமே காரணம் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இறுதியாக, இவ்வகையில் ஒவ்வொரு துறையிலும் முதலாளியமும், பார்ப்பனியமும், புதிய பார்ப்பனியமும் சேர்ந்துகொண்டும், தனித்தும் அடிமைப் படுத்துகிற நிலைகளை நாம் ஆழ்ந்து கற்றுக் கொள்ளும் பொழுதுதான், நாம் விடுதலைப் போரை எங்கிருந்து தொடங்குவது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

உணவு இல்லாத ஏழ்மைத் தனத்தை மட்டும் பார்த்துவிட்டு, வல்லாளுமையாளர்கள் (ஏகாதிபத்தியர்கள்) இந்நாட்டைச் சுரண்டுவதாக மட்டும் கூறிக் கொண்டு, அவற்றிற்காக உரிமை கேட்டுக்கொண்டிருக்கும் உலுத்த இட, வலப் பொதுவுடைமைக் காரர்களைப்போன்று குறுகிய சிந்தனையையும், சாதி, மத வேறுபாடுகளை மட்டும் பார்த்துவிட்டு, அதற்காகவும் கடவுள் எரிக்கப்படவேண்டும் என்பதற்காகவும் (கோயிலில் உள்ள) கல்லை உடைப்பதாக எண்ணித் தம்மினத்தின் இணைப்புத் தொடரி (சங்கிலி) யின் பற்களையேஉடைத்துக்கொண்டிருக்கும் திரவிடக்கட்சிகள் போலவும், அரை வேக்காட்டுத் தனத்தோடு சிந்திக்காமல் ஆழ அமிழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். அவ்வகையில் நம் அடிமைத் தனங்களினின்று விடுதலை பெறும் உயர் தனிப்போரை நாம் எங்கிருந்து தொடங்கவேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும்.

மேலும் நம் தமிழினத்தைப் பொறுத்த வரையில் நம் அடிமைத்தனம் என்பது ஆல்போல் பரந்து, அருகு போல் வேரூன்றிவிட்டது. எனவே அதைப் பிடுங்கி எரியும் பொழுது மற்றொன்று காளானாய் வளரத் தொடங்கிவிடும். எனவே இக்கட்டான இச்சூழலில், எதை நாம் முதலில் செய்வது, எதைப் பின்னால் செய்யவேண்டுவது என்பதைத் தெளிவுபடுத்தி உணர வேண்டும்.

அவ்வகையில், முதலில், பெண் உரிமை என்பது இவ்வடிமை நிலைகளினின்று விடுதலை பெறுவதற்கு எவ்வகையில் தேவை என்பதை நாம் உணரவேண்டியவர்களாக உள்ளோம்.

பெண் உரிமை என்பது, பூட்டப்பட்டிருக்கும் வீட்டிற்குள்ளிருந்து வெளியில் வருவதும், வெளியில் வந்த பெண் வேலைக்குப்போவதும், வேலைக்குப் போகிற பெண் தன் சிந்தனைகளை வெளிப்படுத்தும் உரிமையும், தன் பெண்ணினத்திற்குத் தேவையான ஆக்கங்களைச் செய்வதாக எண்ணிக் கூக்குரல் இடுவதும், அவ்வகையில் தம் நாகரிகம், பண்பாடுகளைத் தங்கள் விருப்பப்படி மாற்றிக் கொள்வதும் என்று போலிமையாக எண்ணுவதோ, செயல்படுவதோ அல்ல.

இது மனத்திரிபு அடைந்த ஒருவன் விரும்புவதாகும். அவன் தான் வீட்டைவிட்டு வெளியே ஓட வேண்டும் என்றும். தன் விருப்பம்போல்தான் நடக்க வேண்டும் என்றும், அதற்கு யாரும் தடை சொல்லக் கூடாது என்றும் விரும்புவான்.

ஆக, இக்கால் நம் தமிழினப் பெண்கள் விடுதலை-என்பதை மேற்சொன்னவாறே சுற்றித் திரிவதாயும், தம் விருப்பம்போல் இயங்குவதாயும், கட்டுப்பாடு இல்லாமல் இருப்பதையுமே எண்ணுகின்றனர். மனஉறுதி கொண்ட ஒரு சிலரைத் தவிர்த்து, அவ்வகை உறுதியற்ற பெரும்பாலார் இவ்வகை விடுதலையினால் வீண் போகின்றனர்; அல்லது வீணடிக்கப்படுகின்றனர்.

ஒட்டகம் முள்செடியைத் தின்றுவிட்டு, அதனால் தம் வாயுள் குத்துண்டு ஒழுகக்கூடிய அரத்தமே அம் முள்ளின் சுவை எனத் தவறுதலாக உணர்ந்து, அச்சுவையை எண்ணியெண்ணி மேலும் முட்களைத் தின்ன முற்படுவதுபோல், இந்த நாற்றமெடுத்த குமுகாயத்தில் தாம் உரிமையானவர்களாய்த் திரிவதாகத் தவறாக எண்ணிக்கொண்டு, உலவும் இப்பெண்ணினம் தமக்கு ஏற்படுகிற இன்னல்களில் சுவைகண்டு, அவ்வகை விடுதலையே தமக்குத் தேவை என எண்ணுவதைக்கண்டு வருந்தவேண்டியுள்ளது.

இது பழைய அடிமைத் தனத்திலிருந்து, புதிய அடிமைத்தனத்திற்கு மாறியதாகுமேயொழிய, சட்டிக்குத் தப்பி நெருப்பில் குதித்த நிலையாகுமேயொழிய உண்மை விடுதலை ஆகாது.

நாற்றமெடுத்த வீட்டில் குடியிருக்க விரும்பாதவள், தன் மேனிக்கு மட்டும் நறுமணப்பொருள் இட்டுக்கொண்டு, சேற்றுப் புதைக்குள் அமிழ்வது போன்று, தன் அடிமைத் தனத்தை நீக்குவதற்குத் தான் புறப்பட்டதாகக் கூறும் இப் பெண்ணினம், தனக்கு எது விடுதலை எனப்படுகிறதோ, அதை விரும்பி எண்ணிக்கொண்டு, இக்குமுகாயத்தின் இழிவுகளுக்கிடையில் உலவி வருகின்றது.

எனவே இவ்வகை அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறுவது என்பது, முதலில், குமுகாயத்தின் விடுதலை நோக்கி அமைவதாகவே இருக்கவேண்டும். இக் குமுகாயத்தில் பெண்கள் முழுமையான, முகாமையான உறுப்பாக இருப்பதால், இக் குமுகாய விடுதலையை அவர்கள் தங்கள் கைகளில் எடுத்தால்தான், அது அவர்களுக்கும் உரிய விடுதலையாக அமையும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே, இவ் வகையில் பெண்ணினம் என்றைக்கு இக் குமுகாய விடுதலையை எண்ணித் தன் உள்ளங்களில் உரமேற்றிக்கொண்டு, தன் தனி நலன்களை உதறித் தள்ளிவிட்டுப் புரட்சியை நோக்கி எழுகிறதோ, அன்றைக்கே பெண் உரிமை கிடைக்கும் பெருநாளாகும்.

இப்போக்கில் குமுகாய விடுதலை என்பது என்ன? அதன் அடிமைத் தனங்களான பார்ப்பனியம், சாதியம், சமயம், மதம் போன்ற இழி பூசல்களை எப்படி அழிப்பது அல்லது எங்ஙனம் அவற்றினின்று விடுதலை பெற முயற்சி செய்வது, என்பதுபற்றி நாம் ஆழச் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இக்குமுகாய இழிவுக்கு அடிப்படையான திரைப்படம், இழிவான இதழ்கள், கல்வி முறை, நாகரிகம், பண்பாடு இவை யாவும், பார்ப்பனியம், சாதியம், மதம் எனும் அடி வித்துகளினின்று கிளர்ந்துவரும் காளான்களேயொழிய அவையே வித்துகள் அல்ல. ஆனால் நாம் அடி வித்துகளான பார்ப்பனியம், சாதியம், மதம் இவற்றைப் பார்க்கவேண்டுமானால், தெளிவாக அவற்றின் சூழ்ச்சிகள் உணரப்படவேண்டுமானால், அவற்றின் வழிக் கிளர்ந்தெழுந்த காளான்களையும் வெட்டி வீழ்த்த வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆக நாம் இக்குமுகாயச் சீரழிவிற்கு அடிப்படையான வித்துகளை, மக்களிடம் காட்டித் தெளிவுபடுத்துவதற்கே சில நுனி மரங்களை வெட்டி வீழ்த்த வேண்டியவர்களாக உள்ளோம்.

குமுகாயம் என்பது மக்களே. இக்குமுகாய இழிவு என்பது மக்கள் இக்கால் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ கொண்ட இழிவுகளே. எனவே இக் குமுகாயப் புரட்சி, மலர்ச்சி என்பது இம் மக்கள் கொள்ளவேண்டிய மலர்ச்சியும், புரட்சியுமே ஆகும். எனவே இம்மக்கள் தங்களுக்காக ஒரு மாற்றத்தைத் தாங்களே கையிலெடுத்துச் செயல்பட நாம் துணையாளர்களாக இருக்கிறோம்.

எனவே, இக் குமுகாயப் புரட்சி என்பது யாரை நோக்கி அமையவேண்டும் என்பதை நாம் நன்கு உணரவேண்டும். நாம் அழிக்கப்பட வேண்டியது ஆள்களை அன்று, அவர்களின் உணர்வுகளை - அவ்வுணர்வுகளை எப்படி அழிக்கமுடியும்?

இந் நிலையில், இன்னொன்றையும் மனத்தில் கொள்ளவேண்டும். சாதி வழி தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பாலார் பொருளியல் நிலையிலும் தாழ்ந்தே இருக்கின்றனர். எனவே அவர்களைச் சாதி வழி தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை என்றும், இனி சாதி வழி தாழ்த்த, உயர்த்தப்பட்டோர் இல்லை என்று கூறி அனைவரும் சமம் ஒரே தரத்தினரே என்றும் சட்டம் இயற்றுவதாலேயோ, நடைமுறைப்படுத்துவதாலேயோ பெரும்பாலானோர் நடைமுறையில் சாதியத்தைத் தம் வாழ்வில் பயன்படுத்தும் நிலையில், சட்டத்திற்காக அஞ்சுவார்களேயன்றி, பொருளியல் நிலையில் தம் இயல்பான ஏழ்மை நிலையினின்று முன்னேற்றம் அடைந்து உய்வு பெறுதல் இயலாது. அதேபோல் பொருளியல் நிலையில சமநிலை கொண்டு வரப்பெறினும், சாதியக் கூறுபாடு எளிமையில் தகர்ந்துபோய் விடாது.

எனவே இச் சூழலில் நாம் குமுகாயப் புரட்சியையும், பொதுவுடைமை விதைப்பையும் ஒருசேரச் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

அதற்கு மேலாக குமுகாய வழி மேம்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களே, பெரும் விழுக்காட்டு நிலையில் பொருளியல் நிலையிலும் முன்னேறியவர்களாக உள்ளனர். மேலும் அவர்கள் பிற இன வல்லாளுமை (ஏகாதிபத்தியம்) இந்நாட்டைச் சுரண்ட வழி அமைத்துத் தருகின்றனர்.

எனவே, இவ்வகையில் மக்களால் எதிர்க்கப்படும் பகையாளி மூன்று நிலைகளிலில் இந்நாட்டு மக்களின் விடுதலைக்கும், எழுச்சிக்கும், தடையாக உள்ளபடியால், அவனை நாம் தகர்த்தெரிவதன் மூலம், இந்நாட்டில் குமுகாய வழிச் சமநிலையும், பொருளியல் வழிச் சமவுரிமையும், அந்நிய வல்லாளுமைக்குப் (ஏகாதிபத்தியத்திற்குப்) பெரும் தடைச்சுவரும் அமைக்க முடியும் என்பதில் தெளிவாக வேண்டும்.

இங்கு, நாம் முன்னே குறிப்பிற்காக கூறியது போல், சாதி ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருக்க சட்டம் இயற்றப்பட்டால், பொருளியல் சமன்மை வராது என்பது தெளிவாக இருப்பினும், இந்த அடிமைக் குமுகாயத்தின் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் சுரண்டும் பிரிவினரிடமிருந்து தப்பித் தவறிக்கூட அப்படியொரு சட்டத்தை நாம் எதிர்நோக்கிவிட முடியாது என்பதை உறுதியாகக் கொள்ளவேண்டும்.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம் பார்க்க)

இலக்கியம் இலக்கணத்திற் கடிப்படை!

தொடர்: 7

உலகத் தமிழின முன்னேற்றக் கழகக்

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்

— நிகழ்ச்சிச் சுருக்கம் —

உள்ளமும், உணர்வும் உழன்று முதிர்ந்திருந்த உரவோர்கள், இறுதி நாளான பத்தாம் நாள், விடிந்த நிலையில் சுறுசுறுப்புடனும், அகநிலையில் பிரிவு நிலையை எண்ணி வருத்தமுற்றுச் சோம்பியும் இருந்தனர்.

முந்தைய நாள் இரவு அறிவித்திருந்த படியே உரவோர்கள் அனைவரும் 30-5-84 அன்று காலை 7 மணிக்குச் சரியாக ஆய்வாளர் மாளிகையின் முன்புற நிழலில் அமர்ந்தனர்.

கழக முதல்வர் ஐயா அவர்கள் தம்முடைய உரையில் உரவோர்களின் உள்ளங்களை நெஞ்சு நெகிழ்க்க வைத்தார்கள். 'பண்பு' என்கிற நிலை அறிவிலிருந்து எங்ஙனம் வேறுபட்டது என்றும், அறிஞன் ஒருவன் தனித்து நூல்களைப் படித்துக்கொண்டு இருப்பானானாலும் அவன் சிறந்த அறிஞனாகத் திகழலாம்; ஆனால் பண்பாளனைக் திகழ இயலாது என்றும், உரவோர்களின் பகுப்பு நிலைகளினின்று ஒவ்வொருவரும் எவ்வெவ்வகையில் செயல்பட வேண்டும் என்றும், பயிற்சி வகுப்பின் நிறைவான நடைமுறைகளைக் கூறி மகிழ்ந்தும் தம் பேச்சை முடித்துக்கொண்ட பின்னர் அனைவரும் காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வந்தமர்ந்தனர்.

சிற்றுண்டிக்குரிய இடைவேளையிலும், அதற்கு முந்தைய நாளிலும் கழக முதல்வர் அவர்கள், தம்முடன் திரு. அறவாழி, திரு. ப. அருளி திரு. செ. வ. புகழேந்தி ஆகியோரைத் துணைவைத்துக் கொண்டு பயிற்சி உரவோர்களுக்கும், பயிற்றுசிரியர்களுக்கும் சான்றிதழ்களைக் கொடுக்கும் வகையில் அணியப் படுத்தினார்கள்.

அன்றைய காலை நிகழ்ச்சி சரியாக 9 மணிக்குத் தொடங்கியது. நிகழ்ச்சிக்கு புலவர் **தமிழ்மாறன்** அவர்கள் தலைமை தாங்கினார்கள். தமிழினத்தின் குமுகாய நலிவுகளை விளங்கப்பேசிய அவர்கள் தம் தலைமையுரையை முடித்துக்கொண்ட பின்னர், மார்க்சிய இலெனினியத்தின் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சித் தலைவர் புலவர் **கு. கலியபெருமாள்** அவர்கள் தமிழ்த் தேசிய இன விடுதலையை வலுவாகப் பேசி, அதன் இன்றியமையாமையை எடுத்துக் கூறியதோடு, ஒரு வலுவான உழவர் புரட்சியைக் கையிலெடுப்பதன் மூலமே, அவ்வகை விடுதலையை நாம் அடையமுடியும் என்றும் பேசினார்கள்.

அவரை அடுத்து, உ. த. மு. க. துணைப் பொதுச் செயலாளர் திரு. **தென்னவன்கோ** அவர்கள் **'பாவலரேறு அவர்களின் கட்டுரைகள்'** எனும் அருந்தலைப்பில், தாம் திரட்டி வைத்துள்ள கட்டுரைகளை வைத்துக்கொண்டு, பாவலரேறு அவர்களின் பாடல்கள் எங்ஙனம் நறுக்காக உணர்வேற்றப்பெற்று வெளிப்படுத்தப் பட்டுள்ளனவோ, அதேபோல் அவர்தம் கட்டுரைகளும் விரித்துரைக்கப்பெற்ற பெரு நெருப்புக் கோளமாக உள்ளன என்று கூறினார்கள்.

அவரைத் தொடர்ந்து கழக முதல்வர் அவர்கள் எட்டு நாள்களுக்கு மேலாக வருகைதந்த பயிற்றுசிரியர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

அதன்பிறகு, 'குடும்பவியல்' - எனும் தலைப்பை நடுவாகக் கொண்டு குடும்பவியல் நிலையில் நம் இயக்கத்தவர்களும், பிற பொதுத் தொண்டர்களும் படும் அல்லல்களை நகைச்சுவைபட கூறிவிட்டு, அந்நிலைகளையெல்லாம் உதறிவிட்டு நாம் வெளியில் வர வேண்டும் என்றும், நாம் இன்னும் போதிய மனப் பக்குவம் பெறவில்லை என்றும் கூறியபின், பகல் இரண்டு மணிக்குக் காலை நிகழ்ச்சி முடிவடைவதாகவும் உரவோர்கள் அனைவரும் நிலக்கோட்டையில் அன்று மாலை நடக்கும் பொதுக்கூட்டத்தில் வந்து கலந்துக் கொண்டு செல்லவேண்டுமென்றும் கூறித் தம் பேச்சை முடித்துக் கொண்டார்கள்.

உரவோர்களில் சிலர் பகல் உணவுக்குப்பின் ஊர் செல்ல அணியமாகி அனைவரிடமும் விடைபெற்றுச் சென்றனர்.

உரவோர்களில் சிலர் விடைபெற்றுச் சென்ற பின்னர், எஞ்சியிருந்த அனைவரும் நிலக்கோட்டைக்குப் புறப்பட அணியமாயினர்.

மாலை 5 மணியளவிற்கு நிலக்கோட்டைக்குப் புறப்படுவதற்கு முன்பாக அனைவரும் வையை ஆற்றில் தம் முகங்கழுவி வரச்சென்று கழுவிவிட்டு, வகுப்புகள் நடந்த இடங்களையும், சோலைகளையும் கண்டு பிரிவாற்றாமையால் மனம் வருந்தினர். பத்து நாள் பழக்கப்பட்டுப் போன நிலையிலிருந்தும், சூழலிலிருந்தும் விட்டுப்பிரிய மனம் வராமல் இருக்கிறது என்றால், கடந்த மூவாயிர மாண்டுகளாகத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு அடிமைகளாய்ப் பணி செய்து கொண்டிருக்கிற நந்தமிழர்கள் இத்தமிழினத்தை, நாட்டை மீட்டெடுக்கவேண்டும் என்ற உணர்வற்றிருக்கிறார்களே என்று எண்ணிக் கவலையுறாமல் இருக்க முடியவில்லை.

தம் பகைவர் தம்மை இழிவுபடுத்திப் பேசிவிட்டதற்காக இமயம் வரை சென்று கொடி நட்டு, பகைவனின் தலையில் கல் சுமக்க வைத்து, இழுத்துவந்த உண்மை மறத்தமிழர் வாழ்ந்த நிலம் என்று நெஞ்சை நிமிர்த்துகிற அதேபொழுது, நம் நெஞ்சு உள்ளே உளுத்துப்போய், எவ்வகைப் பயனுமின்றிக் கோழையராய் உலா வந்து கொண்டுள்ளோமே என்று எண்ணிக்கொண்டே சித்தர் குன்றத்தில் நட்டுவந்த உ. த. மு. கழகக்கொடியின் செந்நிறத்தைக் கண்டு வருந்தி, பெருமூச்சோடு நிலக்கோட்டை திரும்பினர்.

நிலக்கோட்டைக்கு ஏறத்தாழ 6-30 மணி அளவிற்கு உரவோர்கள் அனைவரும் வந்துசேர்ந்தனர்.

அன்று மாலை 7 மணியளவில் நிலக்கோட்டை உந்து வண்டி நிலையத்திற்கு அருகில் உள்ள தண்ணீர்த் தேக்கத் திடலில் பொதுக்கூட்டம் தொடங்கியது. கூட்டத்திற்கு புலவர் **தமிழ்மாறன்** தலைமை தாங்கினார். தமிழினத்தின் தாழ்ச்சியும், வீழ்ச்சியும் எவ்வகையில் நடைபெறுகின்றன என்று சுட்டிவிட்டு, வடவர்கள் என்றுமே நமக்குப் பகைவர்கள் தாம் என்று கூறித் தம் முன்னுரையை முடித்தார்.

கூட்டத்திற்கு வந்திருந்தார் அனைவரையும் திரு **வியனரசு** வரவேற்றபின், திரு. **இனநலவேந்தன்**, திரு. **தாரை-தமிழ்வென்றி**, திரு. **மா. செ. தமிழ்மணி** ஆகியோரின் உரைக்குப் பின்னர், புதுவை மாநில அமைப்பாளரும், சொல்வாயவறிஞருமாகிய திரு. **அருளியார்** அவர்கள் தமிழினத்திற்கு ஏற்படுகிற இன்னல்களைத் தெளிவாக விளக்கி அரைமணி நேரம் உரையாற்றினார்கள். அவரை அடுத்து துணைப் பொதுச்செயலாளர் திரு. **தென்னவனகோ** வீழ்ந்துபட்ட தமிழினத்தை எங்ஙனம் ஈடேற்றுவது எனும் கருத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கையில் மின்சாரம் இல்லாமல் போகவே கையொலி பெருக்கி **(Mocaphoue)** வைத்துக்கொண்டு பேசினார்.

அவரை அடுத்து தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சித் தலைவர் புலவர் **கலியபெருமாள்** கூலி உழவர்களின் சிக்கல்களை எடுத்துக் கூறி, உழவர் புரட்சியை இந்த நாட்டில் எங்ஙனம் ஏற்படுத்துவது என்றும் விளக்கமாகப் பேசினார்கள். அவரைத் தொடர்ந்து கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் ஏறத்தாழ இரண்டு மணி நேரம் நீண்டதொரு விளக்கத்தை அவ்வூர் மக்களுக்கு அளித்தார்கள். தமிழினம் எங்ஙனம் மொழி இனம், பொருளியல், கலை பண்பாட்டு நிலைகளில் தாழ்ந்துபட்டு. வீழ்த்தப்பட்டுள்ளது என்பதை விளக்கினார்கள்.

இரவு நெடுநேரம் ஆனதாலும் மின்சாரம் இல்லாதபோதிலும் கூட்டம் ஓரளவு இருந்து சிறப்பான கருத்துகளை உளம்உருகி வரவேற்று அமர்ந்திருந்தது.

இரவு 1 மணி அளவிற்குக் கூட்டம் முடிவுற்ற பின்னர், கழக முதல்வரும் அன்பர்களும் அன்று இரவு நிலக்கோட்டையிலேயே தங்கியிருந்து விட்டுக் காலையில் தத்தம் ஊர்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர். கழக முதல்வர், தம் குடும்பத்தினருடனும், துணைப் பொதுச் செயலாளர், பயிற்சி வகுப்புக்கான பொருளாளர் திரு. **புகழேந்தி** ஆகியோருடனும் திண்டுக்கல் வந்திருந்து கணக்கு வழக்குகளைப் பார்த்துச் சரி செய்துவிட்டு, மறுநாள் திருச்சி மாவட்டத்தில் தமக்குள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் புறப்பட்டுச் சென்றார்கள்.

கடந்த பத்துநாள் பயிற்சிகளும் தனி உரவோர்களின் உள்ளங்களில் மட்டும் நிலைத்து நிற்கும் நாள்களாக இல்லாமல், இத்தமிழின வரலாற்றிலேயே தமிழின முன்னேற்றத்திற்கு இத் தமிழ் மக்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய பயிற்சிகளுக்குமுதன்மையானதாக அமைந்ததை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ மறக்கவோ முடியாது என்று பெருமைக்காக கூறிக் கொள்ளாமல் அம் முதல் படியைக் காட்டிலும் நாம் அடுத்து எடுத்துவைக்கவேண்டியது அழுத்தமாகவும் விரைவாகவும் வலுவானதாகவும் அமையவேண்டும் என்று ஒவ்வொருவரும் எண்ணவேண்டும். (முற்றும்)

— செய்தி: நம் சிறப்புச்செய்தியாளர்.

(4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஏனெனில், சாதிப் பாகுபாடே அவர்களின் ஊட்ட உணவு. அதுவே அவர்களின் உயிர்ச்சாரம். அ'து இல்லாமல், அவ்வகையில் மக்களை ஒன்றிணைப்பது மூலம் தங்களின் நிலைப்புத் தன்மைக்கு ஆளும் பிரிவு (வர்க்கம்) என்றைக்கும் குந்தகம் விளைவித்துக் கொள்ளாது.

எனவே, நாம் குமுகாயப் புரட்சியையும், பொதுவுடைமை விதைப்பையும், பிறநாட்டு வல்லாளுமை எதிர்ப்பையும் ஒருசேரவே பெரும் புரட்சியின் மூலம் செய்வதே சாலச் சிறந்ததும், எளிய வழியும் ஆகும் என்பதை ஆய்வுக்குட்படுத்தித் தெளிதல் வேண்டும்.

இறுதியாக, அப்படிப்பட்ட ஒருபெரும் புரட்சியை நாம் எப்படிச் செய்வது என்பதே நம் முழுமையான இறுதிக்கேள்வி!

இந்நிலையில், நாம் நம் பகைவனை முழுமையாக அடையாளம் கண்டுகொண்ட போதிலும், இப்பகைமை உணர்வு தானாக எச்செயலையும் செய்துவிட முடியாது என்பதையும், அப் பகைவர்களுக்கு ஒரு பெரும் பின்புலம் இல்லாமல் இவை நடைபெறா என்பதையும் நாம் உணர்கிற அதே பொழுதில், அவ்வுணர்வு ஊக்கத்தோடு வினைபுரியவும் வினை யூக்கிகளாக நடுவணரசு செயல்படுகிறது என்டதை நாம் தெரிந்து வைத்திருக்கிற அதே நேரத்தில், பொருளியல் நிலையில் நம்மினத்திடமிருந்து சுரண்டிப் பிழைப்பு நடத்தும் ஒரு பெரும் ஆளும் பிரிவினர் நடுவணரசினரே என்பதையும், அவர்களும் வேறு யாரோ இல்லை, அதே பார்ப்பனிய முதலாளியக் கூட்டத்தினரே என்பதையும் நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

அவ்வகையில், தம் பகையாளிகள் என்பவர்கள் நம்முடனும் இருக்கிறார்கள்; நம் ஊரிலும் இருக்கிறாகள்; நம் நாட்டிலும் இருக்கிறார்கள்; இவ்விந்தியத் துணைக் கண்டத்திலும் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெளிவாகிறது.

அவ்வாறானால், நம்மால் முதலில் எதிர்க்கப்பட வேண்டியவர்கள் யார்? என்பதைச் சிந்திக்கவேண்டியார்களாக நாம் உள்ளோம். நம்முடனே உள்ள பகையாளியை நாம் எடுத்த எடுப்பிலேயே தாக்குவதினால், அல்லது எதிர்ப்பதினால் இழப்பு நமக்கே அதிகம்.

நம்முடன் உள்ளவனும் நம்மை எதிர்ப்பான்; அனைத்து வல்லதிகாரம் கொண்ட நடுவணரசும் நம்மை ஒடுக்கும். எனவே, இந்நிலையில் சூழ்ச்சியாக நாம் நம் நாட்டிலேயே உள்ள நம் பகைவரோடு ஒத்துப்போகா விட்டாலும், பகைமைப் படுத்தாமல் நம் முதல் பகையாளியான, நம்மை ஒடுக்கும் திறம் படைத்த நம்மீது வல்லதிகாரத்தின் வழி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிற, நம்மைப் பலவகையிலும் சுரண்டிக் கொழுக்கிற, உலகில் வாழும் தமிழனுக்கு இன்னல் எனில் நாம் கூக்குரலிடுகிற நிலையில் கூட இல்லாதவகையில், நம் தொண்டைகளை அறுத்துவிடுகிற ஈழத்தமிழர் மானம் காக்க முனைந்து வருகிற நம் மனங்களை மாய்த்துவிடுகிற, நம் செந்தமிழ் இளைஞர்கள் ஈழத்திலே கொலை செய்யபடுகிற பொழுது கொதிக்கிற நம் குருதியை வேடிக்கைப்பார்த்து வெறிபிடித்து நகைத்துத் திரிகிற இந்த நடுவணரசின் கொடுமையான பிடிகளிலிருந்து நாம் விடுபட்டால் தான், நாம் நம் நாட்டில் உரிமையோடு எதையும் செய்ய இயலும் என்பதைத் தெளியவேண்டும்.

அக்கால் தான் நாம் நம்மினத்தினரிடையே குமுகாயப் புரட்சி நடத்திக் குமுகவியல் சமன்மையையும், பொருளியல் வழி சமவுடைமையையும் அடைவதோடு, பெண் உரிமையையும் பெறமுடியும். அத்துடன், நம் அருந்தமிழும் மீட்கப்பெற்று, இவ்வுலகில் மொழியியல் நிலையில் முதன்மை மொழியாகவும், மூலமொழியாகவும் திகழ்கிற பெருமைகொள்ள முடியும். அதே பொழுதில், உண்மை நிலைகளையும் உலகுக்குணர்த்த முடியும் நாம் விடுதலைபெற்று முழு உரிமை கொண்டதுந்நிலையில் நம் நிலத்தில், தன்னிறைவு தரக்கூடிய ஓர் உண்மைக் குமுகாயத்தை-ஓர் உண்மைக் குடியரசு நாட்டை-அமைத்து வெற்றியையும் அடையஇயலும்.

எனவே, நம் முதல் முழக்கமான 'தமிழ்நாடு தமிழருக்கே' தமிழர் நாட்டை அடைந்தே தீருவோம்! -என்கிற வகையில் முன்னெடுத்துச் சென்று ஒரு பெரும் புரட்சிக்கு வித்திடுவோமாக! 0

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாகள்ளில் மாலையில் 5 மணிக்கு மேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

— அமைச்சர்.

இலக்கணம் இலக்கியத்திற் கடிப்படை!

அவலூர்ப்பேட்டையில் தமிழர் திருநாள்:

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பில், பொங்கல் பெருவிழா, திருவள்ளுவராண்டு 2016, காரி (சனி) அன்று காலை 10-00 மணியளவில், பள்ளி மாணவர்களுக்குப் பேச்சு, கட்டுரை, தனி நடிப்பு, மற்றும் பாட்டுப் போட்டிகளில் தேர்ச்சிபெற்றோரைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சியுடன் விழா, தொடங்கியது. 1-30 மணியளவில் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

பிற்பகல் 4-00 மணியளவில் உயர்மிகு, எசு. பாலசுப்பிரமணியம்க.மு;இ.ச; மூறையாகத் தலைமை ஏற்க, கிளைக் கழகத் (உ.த.மு.க.) தலைவர் உயர்மிகு கோ. சரவணன் க.மு முன்னிலை ஏற்க, செஞ்சி வட்டச் செயலாளர் தா. நெஞ்சிற்கினியன் அனைவரையும் வரவேற்றார்.

உ.த.மு.க கிளைக் கழகப் புரவலர்கள் உயர்மிகு. இரா. கணபதி, சா. கந்தசாமி, கி. கோவிந்தராசன், மு. பலராமன், இரா. செழியன் (பொருளாளர்), உலகமுதல்வன் (செயலாளர், உ.த.மு.க-திருவண்ணாமலை) முதலியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள். உயர்மிகு ந. பழனிவேல் க.மு;கல்.இ., (உதவித் தலைமை ஆசிரியர், மேல்பாலையனூர்) இராம. குப்புஐயா (தலைவர், திருக்குறள் பேரவை, அவலூர்ப்பேட்டை) சிறப்புரையாற்றினர். உயர்மிகு, ஏ.கே. சீனிவாசன் (துணை ஆய்வர், காவல்துறை அவலூர்ப்பேட்டை) அவர்கள், தேர்ச்சிபெற்ற — மற்றும் போட்டிகளில் கலந்துகொண்ட மாணவ மணிகளைப் பாராட்டி—இருபத்தேழு முதல், இரண்டாம் மூன்றும் பரிசுகளையும்—மற்றும் நூற்றுக்கணக்கான ஆறுதல் பரிசுகளையும் வழங்கினார். விழாவிற்கு வந்திருந்த சிறுவர் சிறுமியர், பெரியோர் அனைவர்க்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இறுதியாக உயர்மிகு கூ.சா. இராமலிங்கனார் (செயலாளர், உ.த.மு.க. அவலூர்ப்பேட்டை) நன்றி கூற விழா இனிதே முடிக்கப்பட்டது. செய்தி: நெஞ்சிற்கினியன்.

தாராபுரம் வட்டக்கிளை – கலந்துரையாடல்

தாராபுரம் வட்டக்கிளையின் கலந்துரையாடல் கூட்டம் மடங்கல் 24-ஆம் பக்கல் அன்று தமிழக ஆசிரியர் கூட்டணி அலுவலகத்தில் வட்டத்தலைவர் பால் இறையொளியனார், க.இ;ப.இ; அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் மூலனூர் புலவர் குமாரசாமி, புலவர் சாமியப்பன், சு. முத்து க.மு., கல்.இ. கி. சீரங்கராயன், தமிழ்வென்றி, செ. சண்முகம் க.இ,கல்.இ, ஆகியோர் கலந்துகொண்டனர். சிறப்பு அழைப்பாளராக ஓவியக் கலைஞர் உடுமலை ப. அறவாழி அவர்கள் கலந்துகொண்டார் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கழக வளர்ச்சிப்பணி குறித்துக் கலந்தாய்வு செய்தனர். முடிவாக மொழி, இன உணர்வூட்டக்கூடிய கருத்துகளை, துண்டறிக்கைகள், விளம்பரத்தட்டிகள் மூலம் பரப்புவதெனவும், நம் கழகத்திற்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முயற்சி மேற்கொள்வதெனவும், உறுப்பினர்கள் திங்கள் ஒருமுறை கூடி நம் பணிகள் பற்றிக் கலந்தாய்வு செய்வதெனவும் முடிவாற்றப்பட்டது.

செய்தி: கி. சீரங்கராயன்

தமிழீழ விடுதலையை ஆதரித்து, தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு நன்கொடையளித்த பொதுக்கூட்டம் திருவொற்றியூர், சென்னை

கடந்த சுறவத்திங்கள் 2-ஆம் பக்கல் (15-1'85) அன்று மாலையில்-உ.த.மு.க.வின் உரத்த இயக்கவினைஞரும், சென்னை மாவட்டப் பொருளாளரும் ஆகிய திரு. துரை. தென்னவன் அவர்கள், தாம் 'அசோக் இலேலண்டி'லும் திருவொற்றியூர் நகரத்திலும் தண்டிய உரு. 4000-ஐ தமிழீழ மக்கள் விடுதலைக்கழகச் செயலாண்மையர் திரு. க. உமா மகேசுவரன் அவர்களுக்குக் கொடுக்கும் பொருட்டுப் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

கூட்டத்திற்கு திரு. மலையா சக்திமோகன் (தி.க) தலைமைதாங்க; தென்முகநம்பி, தமிழ்வென்றி, பொழிலன், வியனரசு, இறை. பொற்கொடி ஆகியோர் பேச்சுக்குப்பின்னர், கழக முதல்வரின் கொள்கைப்பாடல்கள் சிலவற்றைச் சிறுமி கயற்கண்ணி பாடினாள். பின்னர் த.ம.வி.க. கொள்கை பரப்புச் செயலர் திரு. வாசுதேவா அவர்களும், அவரை அடுத்து இந்தியப் பொதுவுடைமைக்கட்சி (மைய சீரமைப்புக் குழுவின்) சார்பாக திரு. ச. ந. நாகராசன் அவர்களும் பேசியபின்னர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலாண்மையர் திரு. உமா மகேசுவரன், ஈழச் சிக்கலைத் தீர்ப்பதற்குப் போராட அனைத்து இயக்கங்களும் ஒன்றிணைய வேண்டுவதின் தேவையை விளக்கினார். அவரை அடுத்து, உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், தமிழனுக்கென்று ஒரு நாடு இல்லாமையைச் சுட்டிக்காட்டி. அவன் விழிப்புணர்ச்சிகொள்ள வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தி ஒன்றரை மணிநேரம் பேசினார்கள்.

கூட்ட முடிவிலும், இடையிலும் பொதுமக்களும் அங்கிருந்த வணிகர்களும் தாங்களே முன்வந்து திரு. உமாமகேசுவரன் இயக்கத்திற்கு நன்கொடையாக ஐந்தும், பத்துமாக ஆயிரம் உருபா அளவு கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு ஊக்கம் தருகின்ற வகையில், செந்தமிழ் இனவுணர்வாளர்களையும், உழைக்கும் உள்ளங்களையும் கலந்து பேசி மிகவும் முயன்று உருவா 4000/- அளவுக்குப் பொருள் தண்டி, த.ம.வி.க செயலாண்மையர் திரு. உமா மகேசுவரனிடம் அத் தொகையை அளித்ததோடு, அதனை ஈழநிலை விளக்கப் பொதுக்கூட்டமாகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடத்திய தமிழின நலவுழைப்புள்ளமாகிய திருவாளர் துரை. தென்னவன் அவர்களை உ.த.மு.க. மிகவும் பாராட்டி மகிழ்ச்சியடைகின்றது. அவர் தமிழ்த் தொண்டு மேலும் சிறக்க வாழ்த்துகின்றது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடல் வழி அவர்க்கு எடுத்துரைத்தோம். அவர் எவ்வளவில் உதவி தேவை என்று கேட்க, அவரிடம், அவர் தகுதிக்கும் தமிழன்பிற்கும் உள்ள நிலையை உருபா பத்தாயிரத்திற்கு நாம் மதிப்பிடுவதாகவும், எனவே அவரிடம அத்தொகையையே எதிர்பார்ப்பதாகவும் கூறினோம். அவர் அத்தொகையை உடனே தருவதற்கு இயலதென்றும், அதற்குக் காலம் கொஞ்சம் தரவேண்டும் என்றும், கேட்டார். நாம் நம் மூச்சு முடிவதற்குள் அதனைத் தந்துவிடலாமென்றும், ஆனால், அதைத் தராவிடில் அவர் வழி அச்சொல் பழியாய் நின்றுவிடுமென்றும் கூறினோம். ஆனால், அவர், தாம் அத்தொகையை எப்படியேனும் எதிர்காலத்தில் தந்துவிடுவதாகக் கூறி, உள்ளே சென்று, ஒரு தட்டில் பழம், தேங்காய், வெற்றிலைப் பாக்குடன் உருபா 301-ஐ வைத்துக் கொணர்ந்து, எம்மிடம் தம் இரு கைகளாலும் நீட்டி அத்தொகை எம் வழிச் செலவுக்காகத் தருவது என்றும், நம் கேட்ட தொகையைப் பிறகு காலத்தால் தருவதாகவும் கூறி, அதனை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கோரினார். ஆனால், நாம் அதனை எடுத்துக்கொள்ள இயலாதென்றும், நம் கேட்ட பத்தாயிரம்உருபாவுக்கு மேலோ கீழோ ஓர் உருபா கூடினாலும் குறைந்தாலும் நமக்கு வேண்டாமென்றும், அதைத் தவிர வேறு எந்தத் தொகையையும் நம் பெற்றுக்கொள்ள இயலாதென்றும் கூறி, அதனை ஏற்றுக்கொள்ள அறவே மறுத்துவிட்டோம்.

அன்று, நாம் அன்பளிப்புப் பெற எண்ணிச் சென்ற ஓரிருவர்களுள் முதலாவதாக எண்ணிய திரு. குன்றக்குடி யடிகளாரே காலங்கூறித் தவிர்த்துவிட்டபின், வேறு பிறர் எவரிடமும் மேற்செல்ல எம் மனம் ஒருப்படாத நிலையில், உடனே ஊர் திரும்பிவிட்டோம். அதன்பின்னர், இன்றுவரையில், அவரிடமிருந்து அத்தொகை வரப்பெறவே இல்லை. இடைக் காலத்தில் அடிகளாரை இரண்டு மூன்று முறை நாம் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில், அவர் தர ஒப்புக்கொண்ட அன்பளிப்பை மீண்டும் நினைவூட்டியும் வந்தோம்.

காலம் இன்னும் கனியவில்லை போலும். ஒரு வேளை காலந்தான் கனியவில்லையோ, மனந்தான் கனியவில்லையோ, நாம் அறிகிலோம். ஆனால், ஒரு 10, 12 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு முறை, வேறு ஒரு வகையில், நாம் காரைக்குடி சென்றபொழுது, நம்மைக் குன்றக்குடிக்கு அழைத்து விருந்து புரந்து, அடிகளார் அவர்கள் உரு. 501-ஐ ஓர் உறையிலிட்டுத் தந்தார். அத்தொகையைப் பின்னரே அறிந்து கொண்ட நிலையில் அதுபற்றி அவரிடம் ஒன்றும் கேட்க இயலாமற்போனது. அதன்பின் அடிகளாரை இன்றுவரை நாம் பார்க்கவும் இல்லை; அத்தொகை பற்றிக் கேட்கவும் இல்லை. இதனை எதற்காக இங்கு குறிப்பிடுகிறோம் எனில், பணம் பலவகையிலும் நம் தொண்டுக்குத் தேவை என்றாலும், அதை விரும்பி வேண்டி, வேறு எதற்காகவுமே, எவரிடமுமே பெற முயற்சி எடுத்துக் கொண்டதில்லை; ஒரு கொள்கை நோக்கிற்காக மட்டுமே, அதுவும் தன்மானத்துடன், பிறர் தாமே விரும்பித்தரும் நன்கொடைகளை மட்டுமே நாம் வரவேற்றிருக்கின்றோம் என்பதற்காகவே. 25-12, பணத்தை என்றுமே நாம் மதித்துப் போற்றியதில்லை என்பதற்கு மேலும் ஓரிரண்டு நிகழ்ச்சிகளையும் நாம் கூறியாகல் வேண்டும்.

ஒருகால் (1970-71 ஆக இருக்கலாம்.) பாவாணர் அவர்கள் காட்டுப்பாடியில் இருந்தபொழுது நடந்தது. வேலூரில் இருக்கும் உலகண்ணல் என்னும் உந்து வண்டி முதலாளி ஒருவர் தூய தமிழ்ப் பற்றாளர். அவர் நம் தென்மொழிக்கு ஒரு பெருந்தொகையை அன்பளிப்பாகத் தர விரும்பிப் பாவாணரிடம் இது பற்றிக் கூறி. எம்மை வந்து வாங்கிச் செல்லும்படி பாவாணரும் 'உனக்கு ஒருவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். செல்வத் தமிழன்பர் உலகண்ணல் என்னும் நன்கொடை தர விரும்புகின்றார்; உடனே வந்து வாங்கிச்செல்' என்று மடல் எழுதினார். ஆனால், நாம் பாவாணர்க்கு "நன்கொடை தருகிறேன் என்று கூறி அழைத்தவுடன் ஓடிவந்து வாங்கிச் செல்பவனல்லன், நான். நன்கொடை என்பது நான் இருக்குமிடத்திற்கு வந்து சேரவேண்டும். அதைத்தேடி நான் வருதற்கு இயலாது. மேலும் நான் உலகண்ணலிடம் நன்கொடை வேண்டி நிற்பவனல்லன். உலகப் பேரண்ணலிடமே நன்கொடையை எதிர்பார்ப்பவன். எனவே, வர இயலாமையை அருள் கனிந்து அவர்க்குத் தெரிவித்து விடுங்கள்" என்று விடை எழுதிவிட்டோம். அப்பொழுது தென்மொழி கடலூரில் இருந்தது.

(தொடரும்)

தமிழ்நிலம் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19-ஈ. ஆ. (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி)

1. வெளியிடும் இடம்	:	சென்னை
2. கால முறை	:	கிழமை ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர்	:	திருவாட்டி மா. தாமரை
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம்
4. வெளியிடுவோர்		
பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
இனம்	:	தமிழர்
முகவரி	:	தென்மொழி அச்சகம் சென்னை-5
5. ஆசிரியர் பெயர்	:	திரு. பெருஞ்சித்திரனார்
முகவரி	:	சென்னை-5

ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும்	திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

25—2—85
சென்னை—5

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான-அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C),657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.